IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

OS. No.118/2008 Date: 24.06.2025

PW1-ராஜு (எ) ராஜா

சாட்சி மீண்டும் முன்னிலையானதன் பேரில் 4 முதல் 11, 14, 15, 23, 24 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

தாவா சொத்தை 3 வருடங்களுக்கு ஒரு முறை பாகம் மாற்றி ஓட்டி வந்தோம். மொத்தம் உள்ள 8 பங்குதாரர்களும் பாகம் மாற்றி ஓட்டி வந்ததோம். கடைசியாக வழக்கு தாக்கல் செய்யும் போது பாகம் மாற்றி கொண்டோம் அதன் பின்பு பாகம் மாற்றவில்லை. 9ம் பிரதிவாதி 2002ம் வருடத்திலேயே வாய்மொழியாக பிரிந்த சொத்தை 10ம் பிரதிவாதிக்கு ஐக்குபந்தி கண்டு தானம் செய்து கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. பின்பு 10ம் பிரதிவாதியும் அதே சொத்தை 24.09.2008ல் தன் மகன் வெங்கடேஷ் ஈஸ்வரிமூர்த்திக்கு தானம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. ஆனால் நாங்கள் பாகம் மாற்றி ஓட்டி கொண்டிருந்தோம். பாகம் மாற்றி ஓட்டியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதியான மல்லிகாவிற்கு 1/8 பாகம் பாத்தியம். மல்லிகா இறந்த பிறகு மருமகள் ஜோதி ஓட்டி வருகிறார். வா.சா.ஆ.5 பாகத்தையும், 4ம் பிரதிவாதியின் வாரிசு அடிப்படையில் கிடைத்த 1/32 பாகத்தையும் நாங்கள் மாற்றி ஓட்டியதில்லை என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவரது வாரிசு 25ம் பிரதிவாதியாக உள்ளார் என்றால் சரிதான். 8ம் பிரதிவாதி தன் மகன் 14ம் பிரதிவாதி முருகேசனுக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்த சொத்தையும் நாங்கள் பங்கு மாற்றி ஓட்டியதில்லை என்றால் சரியல்ல. பின்பு முருகேசனும் அதே சொத்தை தன் மகன் ஜீவானந்தத்திற்கு தானம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. ஆனால் பங்கு மாற்றி ஓட்டி வந்தோம். தாவா சொத்திற்கு தற்சமயம் எத்தனை நபர்கள் பெயரில் பட்டா உள்ளது என்று எனக்கு தெரியாது. நாங்கள் எப்போதும் பங்கு மாற்றி ஓட்டியதில்லை என்றாலும், ஓட்டியதாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தை ஏற்கனவே

வாய்மொழியாக பாகம் பிரித்து அவரவர்களுக்கு பாகம் பிரிந்த சொத்தை அவரவர்கள் தனிப்பட்ட முறையில் அனுபவத்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 2002 ற்கு முன்பே பாகம் பிரித்து ஐக்குபந்தி கண்டு அனுபவித்து வரும் சொத்திற்கு நான் தாவா தாக்கல் செய்துள்ளது நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

12,13,16 முதல் 22, 26 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

தாவா சொத்து ஆதியில் செல்லப்பகவுண்டர், ரங்கையகவுண்டர், வரதப்பகவுண்டர் ஆகியோருக்கு கூட்டாக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அதில் செல்லப்பகவுண்டருக்கு 4/8 பாகமும், ரங்கையகவுண்டர் மற்றும் வரதப்பகவுண்டருக்கு தலா 2/8 பாகமும் பாத்தியம் என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்த வரை மேற்படி பாகஸ்தர்கள் அனைவரும் கூட்டாக தான் அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். சின்னாகவுண்டனூர் தாவா சொத்திலிருந்து 1 கி.மீ தொலைவிலுள்ளது. சின்னாகவுண்டனூரில் தான் வரதப்பகவுண்டரின் மகன் செல்லப்பகவுண்டரின் வாரிசுகள் ராமாயி, விஜயா, கௌரிசங்கரி, விஜயா ஆகியோர் குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான். சின்னாகவுண்டனூரில் சேகர் வகையாறாவிற்கும் நிலமுள்ளது என்றால் சரிதான். சேகர் குமாரபாளையத்தில் குடியிருந்து கொண்டு தாவா சொத்திற்கு வந்து போக உள்ளார் என்றால் சரிதான். 12, 13, 16 முதல் 22, 26 பிரதிவாதிகளின் பாகத்தை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக நான் 1 முதல் 15 பிரதிவாதிகளுடன் கூட்டு சேர்ந்து கொண்டு மேற்படி பிரதிவாதிகளை தரப்பினராக சேர்க்காமல் ஆரம்பத்தில் தாவா தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/-ராஜு (எ) ராஜா

ஒப்பம்/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.